TAMIL NADU LEGISLATIVE
15 SEP 1980
MADRAS-600 009

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

திங்கட்கிழமை 1980 பிப்ரவரி 11.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

திருவொற்றியூர்-எண்ணூர் கடலோரப் பகுதி.

*வினா எண் 101 திரு. பொ. சிகாமணி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) திருவொற்றியூர், எண்ணூர் கடலோரப் பகுதிகளை அழகுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத் திட்டம் எப்போது முதல் செயல் படுத்தப்படும்?

திரு எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்):

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. பொ. சிகாமணி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் பரிசீலிக்கப்படும் யோசனை இப்போது இல்லை என்று சொல்கிறார்கள். அந்தப் பகுதி தொழிற்சாலைகள் நிறைந்த பகுதியாகும். பல்லாயிரக்கணக்கான தொழிலாளர் களுடைய வாழ்வுப் பிரச்சினை அதிலே அடங்கியிருக்கிறது. இதற்கு என்று ஒரு உயர்மட்ட குழு அமைத்து அதற்கான முயற்சியை மேற்கொள்ள அரசு முன்வருமா என்பதை கடைசி முறையாகக் கேள்வி கேட்கிறேன். அதற்கு அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. எம். வின்சென்ட்: (அமைச்சரின் பேரவைச் செயலர்: தலைவர் அவர்களே, திருவொற்றியூர் எண்ணூர் கடலோரப் பகுதிகளை அழகுபடுத்தும் திட்டம் இல்லை என்றுதான்

குறிப்பிட்டேன். வட சென்னையில், இராயபுரம், எண்ணூர் பகுதியில் கடலரிப்புக்கு எதிரான தாற்காலிகப் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்காக ரூ. 30·80 லட்சங்களுக்கான ஒரு மதிப்பீட்டை தலைமைப் பொறியாளர் (கட்டடம்) அனுப்பியுள்ளார். இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. பொ. சிகாமணி: தலைவர் அவர்களே, பரிசீலனையில் இருப்பதாக அமைச்சரின் பேரவைச் செயலர் கூறியிருக்கிறார். ஏற்படுத்த இருக்கும் அந்தக் குழுவானது நிரந்தரமாக செயல்படுமா?

திரு. எம். வின்சென்ட்: (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவர் அவர்களே, நிரந்தரப் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து நில மற்றும் நீர் இயல் ஆய்வுத் துறை ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது. அவர்களுடைய முடிவு வந்தவுடன் அதற்குப் பின்னாலே எந்த வகையிலே முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டுமோ அந்த வகையிலே மேற்கொள்ளப்படும்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே அழகுபடுத்தும் குறிப்பு இல்லை என்று சொன்னார்கள். அதே நேரத்திலே கடலரிப்பைத் தடுக்கின்ற முறையிலே—காசிமேடு போன்ற பகுதிகளிலே ஏற்கனவே ரோடுகளில் அரிப்பு ஏற்பட்டிருக்கிறது—தடுப்புச் சுவர் கட்டுவதற்கு உத்தேசம்) உண்டா?

திரு. எம். வின்சென்ட்: (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவர் அவர்களே, திருவொற்றியூர் எண்ணூர் கடலோர பகுதிகளை அழகுபடுத்தும் திட்டம் பற்றிய கேள்வி இது.

கோவை மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கிக் கட்டிடம்.

*வினா எண் 102 திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கிக் கட்டிடத்தின் ஒரு பகுதியை கோ-ஆப்டெக்சிற்கு வாடகைக்கு விடும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விபரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) ஆம்.

(ஆ) வங்கியின் பழைய கட்டிடத்தின் ஒரு பகுதியை கோவை மத்தியக் கூட்டுறவு வங்கி ''கோ-ஆப்டெக்சிற்கு'' 17—9—1979-ல் வாடகைக்கு விட்டுள்ளது.